செ.வெ.எண்:04 நாள்: 03.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய் துறையின் சார்பில் ரூ.60,28,250 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பல நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (03-07-2016) வழங்கினார்

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்நலத்துறை அமைச்சர் அவர்கள் 451 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய் துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் 17 பயனாளிகளுக்கு ரூ.39,250 மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான கசோலைகளும், 104 பயனாளிகளுக்கு ரூ.9,04,000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், 17 பயனாளிகளுக்கு ரூ.17,42,500 மதிப்பில் விபத்து நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 121 பயனாளிகளுக்கு ரூ.14,92,500 மதிப்பில் இறப்பு நிவாரணத்தொகைக்கான காசோலைகளும், 33 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளும், 200 பயனாளிகளுக்கு ரூ.18,50,000 மதிப்பில் 148 புதிய குடும்ப அட்டைகளும், 11 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ்களும் என மொத்தம் 451 பயனாளிகளுக்கு ரூ.60,28,250 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்த அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக்கடன் தள்ளுபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்களாகவும் உயர்வு உள்ளிட்ட 5 முக்கிய திட்டங்களை கையொப்பமிட்டு உடனடியாக நிறைவேற்றி உள்ளார்கள்.

மேலும், விராலிமலை பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று இலுப்பூர் வட்டத்திலிருந்து விராலிமலையை தனியாக பிரித்து தனி தாலுக்காவாக உருவாக்கப்பட்டுள்ளது. விராலிமலை சட்டமன்ற தொகுதி முழுமைக்கும் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டு குடிநீர்த்திட்டம் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இத்தொகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவே, தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பொதுமக்கள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. ஜெயபாரதி, வருவாய் கோட்டாட்சியர் திரு.வடிவேல்பிரபு, ஒன்றியக்குழுத் தலைவர் திரு.சுப்பையா, ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் திரு.திருமூர்த்தி, ஆத்மா குழுத் தலைவர் திரு.பழனியாண்டி, வட்டாட்சியர் திரு.சுவாமிநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.விஜயநாதன், மதியநல்லூர் ஊராட்சிமன்ற தலைவர் திரு.வி.ராமசாமி,ஒன்றியக் குழு உறுப்பினர்கள் திரு.பெரியசாமி, திரு. கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள்மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**